உ

கடவுள் துணை.

மதுரை

மீனாட்சியம்மன் பதிகம்.



சென்னை:

B. இரத்தின நாயகர் அண்டு சன்ஸ்

அவர்களாற்றமது

திருமகள்விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923.

24

உ

கடவுள் துணை.

மதுரை

மீனாட்சியம்மன்பதிகம்

நேரிசை வெண்பா.

பொற்பாரமண்டபஞ்சூழ் பொற்றாமரைக்கரைவாழ்
கறபகநேர்சித்திக்கணபதியே விற்பனஞ்சேர்
அற்புதநம்மீனாட்சி யம்மைதனக்கின்பமுற
நற்பதிகம்பாடவரம் நல்கு.

எழுசீர்க்கழிநெடிலடி இரட்டை யாசிரிய விருத்தம்.

பூமின்வளரீரேழு பதினாலுபுவனமும்
    போற்றியே தொழுதுபணியும்
பொன்னளினபாதமுங் கனிவாயும்வதனமும்
    பொற்புநயனப்பார்வையும்
சாமிகணபதிதனைப் பெற்றுசுவையமுதமரு
    டன்னிய விசாலவடிவுந்
தவராஜர்புவிராஜர் கவிராஜர்பேரினிற்
    றயவுசே.ரபையரஸ்தமும்
நேமியாதிறமுற்ற மரகதசொரூபமும்
    நிறைவுடன் பிரசன்னமாய்
நேசம்வைத்தெந்தன்முன் றோன்றுசௌபாக்கியமீ
    நித்தியகல்யாணியுமையே

வாமிதன்மாமிசிவகாமியபிராமியுன்
மைந்தனை மெனையாளுவாய்
மதுவமிர்தகாமாட்சி பதிவிர்தைவிசாலாக்ஷி
மதுரைநகர் மீனாட்சியே. 1
மாலைசந்த்ராரஞ் சரப்பளிபதக்கம்வை
டூரியநுகர்கட்டியும்
மௌலிமணிமகுடம் புலாக்குமூக்குத்திதிரு
மங்கிலியமுஞ் சிமிக்கி
ஓலைநவமணிவிசிறி முருகுபட்டங்காரை
யுயர்கங்கணமு மோதிரம்
ஒட்டியணமெட்டு பாடகந்தண்டைகொலு
சொலிகிண்கிணிச் சரிகையாற்
சேலையீரவிக்கை யணிந்துசெங்குங்குமத்
திலதமிட்டு விசித்ரமாய்ச்
செகஜோதியாகச் சொலிக்கச்சிறப்புற்ற
திவ்யகுண சிந்தாமணி
வாலையனுகூலிதிரி சூலிகிருபாலியுன்
மைந்தனை மெனையாளுவாய்
மதுவமிர்தகாமாட்சி பதிவிர்தைவிசாலாட்சி
மதுரைநகர்மீனாட்சியே. 2
பாடலபிநயகீத தேவதாசிகள்வந்து
பரதநடனம் புரிவதும்
பதினெட்டுவாத்திய முழக்கமும்வருடமோர்
பனிரண்டுதிருவிழாவுஞ்

சோடசோபகார நைவேத்தியமகத்துவமுஞ்
சுக்ரவாரச் சேவையுஞ்
தோத்திரஞ்செய்தன்பர் கொண்டாடிநிற்பதுந்
துவாதசாந்த ஸ்தலமெனும்
ஆடலறுபத்துநான்கு புலிதிரிகூடலாம்
ஆலாட்சியாகச் சேத்திரமும்
ஐந்துமாபாதக விமோசனஞ்செய்யிரண்
டாறுதீர்த்தத்தின் வளமும்
மாடமாளிகைகூட கோபுரவிசேடமும்
மைந்தனுன்சொல்லவெளிதோ
மதுவமிர்தகாமாட்சி பதிவிர்தைவிசாலாட்சி
மதுரைநகர்மீனாட்சியே. 3
கோமளதாகவுக்கிரப் பாண்டியன்றனைக்
கொஞ்சிமடி மீதில்வைத்து
கொங்கையினிருத்திப் பதானபாலமுதந்
கொடுத்தபார் பதிவராகி
சாமளநிறப்பதும் நாபனீசகோதரீ
சாம்பூன தச்சபைதனிற்
சப்தசுரதாளமொடு ருத்ரனுனிர்த்தமிடு
சத்திமாதங்கி கௌரி
யாமளீசமஸ்தமுந் தானுனலோகநா
யகிமகிட சங்காரிநீ
யளவிடக்கூடாத வறுபத்துநாற்கலைக்
யானவித்தையிலுந்தணர்

மாமணிச்சிகாமணி சிரோன்மணிமனோன்மணியுன்
மைந்தனுமெனையாளுவாய்
மதுவமிர்தகாமாட்சி பதிவிர்தைவிசாலாட்சி
மதுரைநகர் மீனாட்சியே. 4

ஆரிசோஷன்சேர னுக்குமேலானமல
யுத்தவசன் வளர்புத்ரியோ
யாங்காரமும்முலைத் தடாதகைமகடூஉ
வாயலங்கிர்த சோடினைத்
தேறின்மீதேறிரத கஜதுரகபதா
திகளெனுஞ் சேனையுடனே
திக்குவிஜயஞ்செய்து பட்டாபிஷேகமாய்ச்
செங்கோல் செலுத்திநாளும்
பாரினிற்கொண்டாட ராச்யபரிபாலனம்
பண்கின்ற ராஜேஸ்வரி
பரமசிவசொக்கநாதக் கடவுள்பாரியாய்ப்
பக்கமதிருக்குமணியே
பாரிசிவநாரியுப காரியதிகாரியுன்
மைந்தனு மெனையாளுவாய்
மதுவமிர்தகாமாட்சி பதிவிர்தைவிசாலாட்சி
மதுரைநகர்மீனாட்சியே. 5

தந்தைதாய்க்குப்புதர னைகக்சனித்துவித்
தரணிதனிலேபிறந்து
தவழ்ந்தடிநடாந்துவிளை யாடித்தெரிந்தபின்
சனிசெய்த கொடுமைதானோ

விந்தையாய்வருமையினி பீடை நோயணுகியும்
விடமான விலைமாதரை
மேவியதிலும்பிரபஞ்ச வாழ்க்கையிலும்
மெலிந்தகுரு பரதேவதா
சிந்தனையிலாமலும் பெரியோரிடத்திற்
சினேகிதஞ்செய்துகன்னி
செல்வப்பொருள்களைத் தடாமல்வீணாட்டி
செலுத்தினே னிதுவரையினி
வந்தமிடிதொந்தரவை யெந்தவிற்முந்தொலையுன்
மைந்தனை யுகந்தாளுவாய்
மதுவமிர்தகாமாட்சி பதிவிர்தைவிசாலாட்சி
மதுரைநகர்மீனாட்சியே 6
ஜென்மித்தநாண்முதற் கொண்டுமையம்மணி
செல்லத்தை யானறிகிலேன்
தேர்ந்தவிற்பன்னர்சம் பாஷணைகள்செய்து
செந்தமிழ்முதற் கரிகிலேன்
உன்மத்தமாய்கெட்ட மிஷ்டம்பண்ணி
யும்பஞ்ச பாதகத்தில்
ஒருகுற்றமாகிலுஞ் செய்திரேன்மனதார
ஊழ்வினைப்பயனென்னமோ
மனதகத்தினல்வந்த துன்பத்தைமுன்செய்த
கதைகாரணம்போலவே
விடமில்லாமனின் னிடமுரைத்தேனெனது
கலிதனை யகற்றுமம்மா

மன்முத்தமிழ்க்கள் சுகிர்தத்தையும்வளர்த்ததாம்
மைந்தனா மெனையாளுவாய்
மதுவமிர்தகாமாட்சி பதிவிர்தைவிசாலாட்சி
மதுரைநகர் மீனாட்சியே. 7
அஞ்சிவநடுக்கடற் கப்பல்விட்டெழுகாத
மாதாரமின்றியோடி
அலையின் றரும்புபோ லுலைவாயின்மெழுகென
வலைந்துகுரு பாவணையதாயத்
தஞ்சம்வேறில்லாம லுன்னடைக்கலமெனத்
தற்காரிவ்வேளை யென்று
சன்னிதானந்தனிற் ரூபந்தமாகிய
சரித்திரம் விரித்துரைத்துங்
கொஞ்சமாவதிரக்க மில்லாததென்னபிழை
குற்றமென் றேருகையமலை
குதித்தபரை நீலியபிராணியாபாசாங்
குசத்தியாகிலு மூனைவிடேன்
வஞ்சமதுனெஞ்சினிற் பொஞ்சாதேபஞ்சையுள்
மைந்தனா மெனையாளுவாய்
மதுவமிர்தகாமாட்சி பதிவிர்தைவிசாலாட்சி
மதுரைநகர் மீனாட்சியே. 8
பில்லிவஞ்சனையேவல்சூனியப்பூதப்
பிசாசுமுனி யெதிர்வராமற்
பிரமுத்திசரணமென் றேயவுமேமனார்
பிராணபய மில்லாமலும்

சல்லியஞ்சச்சரவு சத்ரரதிகள்கோடி
சனிக்கலியனூகாமனுஞ்
சஞ்சலாவஸ்தைபிணி விசனமதுருமனுஞ்
சற்சனர்களிகழாமலும்
மெல்லிமையுடன்மன நினைத்ததுகைகூடவு
மிக்ககிர்பைசெய் விக்ஞாபணம்
வினவினைனின்றமுத லென்றைக்கும்ரட்சிக்க
வேண்டுமுக்கண்ணிதேவி
வல்லிபிரபல்லியச் செல்வியென்றல்லியுன்
மைந்தனுமெனையாளுவாய
மதுவமிர்தகாமாட்சி பதிவிர்தைவிசாலாட்சி
மதுரைநகர் மீனாட்சியே. 9

மகமேவு நிகரானநவநிதிகுபேரனிட வாழ்வு போலென்றனக்கு, மட்டடங்காதநிதியஷ்டைஸ்வரியமும் வள்ளலெனவேயீகையுஞ், சகமதிலிகபரசாதனஜென்மசாபல்லிய தமிழ்சமஸ்கிர்தநூற்களுஞ், சதிரான சாமீபசாரூப சாயுச்ய பகவியதுவுஞ் சுகமாகுமிதுசகல சாம்பிராச்யபோகஞ்சுகித்து நீடூழி வாழ்கச், சுபசோபனப்பதிக மாயிப்ரபந்தந்துதித்தேன் வரங்கொடுத்து, மகிமைதிகழகமகிழ விழுதுசமயமுன் மைந்தனுமெனையாளுவாய், மதுவமிர்தகாமாட்சி மதுரைநகர்மீனாட்சியே 10

மீனாட்சியம்மன்பதிகம் முற்றிற்று.

———